


கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, துணை மேயர் காமராஜ், இ.எஸ்.பெர்னாட், ஏ.கே.கருணாகரன், அ. தமிழ்மாறன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இராஜேஷ்வர் ஸ்ரீதர் தலைமை!

# சென்னை கிழக்கு - முதல்வரின் மனிதநேய திருவிழா பட்டிமன்றம்!

## அமைச்சர் ஆர்.காந்தி துவக்கி வைக்கிறார்! அருள் பிரகாஷ் – அருண் – அனுகிரகா – ராகவேந்திரன் வாதிட்டனர்!

*சென்னை, மார்ச் 22 -*

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 31, கற்போர் நிகழ்த்தும் சொற்போர்! கழகத்தின் வழியில் நிற்போம்!! எனும் தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக விவசாய அணி சார்பில் மாபெரும் புகழரங்கம் நேற்று (21.03.2025) புரசைவாக்கம், ஒய்.எம்.சி.ஏ டவுட்டனில் நடைபெற்றது.



இப்புகழரங்கத்தில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி தலைமை வகித்தார். மாவட்டக்கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, கோ.ஏகப்பன், வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், புனித வதிஎத்திராசன் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, சுதாதீனதயாளன் எம்.சி, சாவித்திரிஸ்ரீவீரராகவன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி, கே.அண்ணபூரணி, கே.வள்ளி, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ்.விஜயலஷ்மி, கே.எம்.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, எஸ்.ஜான்சிராணி, சகினாபேகம், சூர்யாரகு, ஜி.ஜெயசூர்யா, அமுல்பாண்டியன், யு.இலக்கியா, எம்.எழில், எஸ்.விஜயலஷ்மி முன்னிலையில், பட்டிமன்றம் துவக்கி வைப்பவர்

கைத்தறி (ம) துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பட்டிமன்ற நடுவர் ராஜா, முதலமைச்சர் வெற்றி அடைய பெரிதும் உதவுவது வேகமா எனும் தலைப்பில் அருள்பிரகாஷ், அருண், விவேகமா? எனும் தலைப்பில் திருமதி.அனுகிரகா, ராகவேந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

வி.விஜயகுமார், ஆர்.ப, ஆ.சுகந்தி, ஜா.ஞானதீபம், புனிதாமோகன், வி.நதியா வரவேற்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் ஆர்.பிரியாராஜன், கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.எம்.யாழினி, தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், புரசை கோ.மணி, க.நந்தீஸ்வரன், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி. எம்.தாவூத்பீ, கே.சாரதா, லதாவாசு, எஸ்.தமிழ்செல்வி, டி.யோகபிரியா, பி.அமுதா, எஸ்.உமா, சி.ஸ்ரீதேவி, என்.உஷாநாகராஜ், கே.பொற்கொடி, க.வினோத், புரசை ஜி.தாமோதரன், எம்.பெரோஸ்கான், எல்.பி.எப்.மோகன், பி.விஜயகுமார், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, கு.கிருஷ்ண மூர்த்தி, து.ஆயிரம், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் அ.நிர்மலாதேவி நன்றி கூறினார்.

அரசு சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் விழாவில் பங்கேற்க வருகை தரும்

# முதல்வருக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் மாபெரும் வரவேற்பு!

## மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் அறிக்கை!

*திருவள்ளூர் மார்ச் 22;;*

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் அவசர செயற்குழு கூட்டம் கும்மிடிப்பூண்டியில். அமைந்துள்ள லீ ராஜ் கோர்ட்யார்ட் ஹோட்டலில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது இதில்.

இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதரசன், மாநில நிர்வாகிகள் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஏ.கே.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இந் நிகழ்ச்சியில்



மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் அப்போது பேசுகையில்

நம்மும் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஏப்ரல் 19ம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க நமது திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பொன்னேரி அடுத்த அம்மையார் குப்பம் பகுதிக்கு வருகை தர உள்ளார்

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் சில இடங்களில் கழகத் தலைவர் அவர்கள் Road show மக்கள் சந்திப்பு வரவேற்பு நிகழ்ச்சியில் சாலையில் இடது புறமா பொது மக்களுக்கு அனைவரும் அணி திரண்டு நின்று உற்சாகம் வரவேற்பு அளித்திட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் பிரம்மாண்டமான ஏற்பாடுகளை செய்திட வேண்டும்

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லை தொடங்கி நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் வரை ஒன்றிய நகர பேரூர் கழகத்தினர்கள் தமது கரங்களில் கழக கொடி வரவேற்பு பதாகைகளை ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தினர்கள் வரவேற்பு அளிக்க வேண்டும்

குறிப்பாக கழக நிர்வாகிகள் பேனர் வைப்பது பட்டாசு வெடிப்பது தவிர்க்க வேண்டும்

தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என வாசகத்துடன் சேர்த்து கழகத் தலைவர் அவர்களுக்கு வருக வருக என சுவர் விளம்பரங்களை எழுத வேண்டுமென என மாவட்ட கழகச் செயலாளர் தெரிவித்தார்

ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மு.மணி பாலன், டி.கே.சந்திரசேகர், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், கா.சு.ஜெகதீசன், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், பி.முத்து, க.சு.தமிழ உதயன், உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்



முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே ஆண்டார்குப்பம் பகுதியில்அரசு விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும் இடத்தினை சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் , டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்ஏ., துரை சந்திரசேகர், நா.செல்வசேகரன் மற்றும் பலர் உள்ளனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

# ‘அன்னம் தரும் அமுதகரம்’-30 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் – அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – கோவி.செழியன் உணவு வழங்கினர்!

*சென்னை, மார்ச் 22 -*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72 வது பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஏற்பாட்டில் “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.




இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் மதிப்புமிகு அண்ணியார் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். இச்சிறப்புமிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.

“அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டமானது நேற்றுடன் (21.3.2025) தற்பொழுது ஒரு மாதம் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட உள்ளது. திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

இச்சிறப்புமிக்க திட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தினந்தோறும் கலந்து கொண்டு காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார். அந்த வகையில் இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 30வது நாளான நேற்று (21.03.2025), துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, 54ஆ வார்டு, உட்வார்பு பகுதி மற்றும் ஏழு கிணறு, 55 வது வார்டு ஏழு கிணறு தெருவில் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.

மேலும் அமைச்சர் கோவி. செழியன் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது ஏழை எளிய அடித்தட்டு மக்கள் பயன்பெற வேண்டும் என்பதால் அமைச்சர் சேகர்பாபு ஆண்டு முழுவதும் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளில் அன்னம் தரும் அமுதகரங்கள் நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்கள்.

எத்தனையோ தலைவர்களுக்கு பிறந்தநாள் கொண்டாடுகிறோம் இந்தியாவில் தன்னிகரற்ற முதல்வராக ஸ்டாலின் விளக்குகிறார் தமிழ்நாட்டு முதலமைச்சரின் மனசாட்சியாக செயல்படக்கூடிய அமைச்சர் சேகர் பாபு நிகழ்ச்சியை மிக சிறப்பாக நடத்தி வருகிறார்.

ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்று அண்ணா சொல்லியதை தலைவரின் பிறந்த நாளில் செய்து காட்டியவர் அமைச்சர் சேகர் பாபு மாநில உரிமைகள் எப்பொழுது வஞ்சிக்கப்பட்டாலும் அண்ணா காலம் முதல் தொடர்ந்து தமிழ்நாடு முதல் குரல் கொடுத்து வருகிறது தொகுதி மறு வரை தொடர்பாக இந்தியாவை தமிழ்நாடு பக்கம் திரும்பி பார்க்க வைத்தவர் முதல்வர் ஸ்டாலின்.

மோடியின் செயல் அதிகார வரம்பை மீறி எது தேர்தல் ஆணையத்தை கையில் வைத்துக்கொண்டு தென் மாநிலங்கள் இல்லாத ஆட்சியை வட மாநிலங்களில் உருவாக்க நினைக்கிறார் அது நடக்காது.

மாநில முதலமைச்சர் மாநாட்டை தென் திசையில் இருந்து துவங்கியுள்ளார். இந்தியாவின் தலைநகர் டெல்லி என்பதை மாற்றி சென்னை என்பதை முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி வழியில் செயல்படுகிறார் என கூறினார். அமைச்சர் சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தினந்தோறும் தனது இல்லத்தில் இருந்து புறப்பட்டு சட்டசபை வருகிறார். தமிழக முதல்வரோ தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார்.. பல்வேறு திட்டங்களை நிறைவேற்று கிறார். .தமிழகமோ அமைதி பூங்காவாக உள்ளது.ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் தனது இருப்பை காண்பிக்க வேண்டும் என்பதற்காக சட்டம் ஒழுங்கு சரியில்லை எனச் செல்கிறார் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு/மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன்(எ) ராஜா, பரத்குமார், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.இராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை

*திருவள்ளூர் மார்ச் 22;*

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் 30-03-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் திருவள்ளூர் அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள ஆர்.எம். கெஸ்ட் ஹவுஸில் மாவட்ட அவைத் தலைவர் மா. இராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி. தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநிலசிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜே ந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன்,



காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்

முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்பு உரையாற்றுகிறார்.

அது சமயம் ஆலோசனை கூட்டத்திற்கு மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் கேட்டுக்கொள்கிறேன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு

பொருள் ; திருவள்ளூர் மாவட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தருவது குறித்து

என மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் அறிக்கை வாயிலாக தெரிவித்தார்

மு.நிரஞ்சன்சாய் தலைமை! எஸ்.முரளி – நந்தனம் கி.மதி முன்னிலை!

# மயிலை கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் காக்கும் கரங்கள் முதியோருக்கு அறுசுவை வழங்கல்!

## மயிலை த.வேலு- தமிழச்சி தங்கபாண்டியன்-எஸ். ஜோயல்-கோவி. லெனின் பங்கேற்பு!

*சென்னை, மார்ச். 22-*

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி

சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி துணை அமைப்பாளர் மு.நிரஞ்சன்சாய் தலைமையில் காக்கும் கரங்கள்மு தியோர் இல்லத்தில் அறுசுவை வழங்கும் நிகழ்ச்சி இன்று (22-03-2025 சனிக்கிழமை) மதியம் 12.30 மணியளவில் சந்தோம் நெடுஞ்சாலை ஆர்.ஏ.புரம் சென்னை யில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, வி.வெற்றிவேல், கோ.கண்ணன், ராஜா அன்பழகன், அ.ரேவதி முன்னிலை வகிக்கின்றனர்.

தினேஷ்மாணிக்கம், த.விக்னேஸ்வரன், டி.ஜெகதீஷ்பாபு, சீ.வி.திவான்குமார், தா.தீபன், வே.ஹேமந்த்குமார், பா.முருகேசன் (எ)குட்டி, சுந்தர், ரகு அபினேஷ் பாபு, நீ.ஜெய்குமார் ந.உதயன், ர.இளையக்குமார் (எ) சூர்யா, ஜெ.ராஜேஷ்குமார், அரவிந்த்ரமேஷ், கு.லோகேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட செய்லாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தூத்துக்குடி எஸ். ஜோயல், கோ.வி.லெனின் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட பகுதி, நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

வினோத், சாம்வேல், கோட்டீஸ்வரன் நன்றி கூறுகிறார்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 30-.03.-2025 ஞாயிற்றுக்கிழமை, காலை 10.00 மணியளவில், உதகை, ஹெவேலோக் சாலையில் அமைந்துள்ள “ஓட்டல் மோனார்க்”கில், கழக துணைப் பொதுச்செயலாளரும் - மாணவர் அணி பொறுப்பாளருமாகிய ஆ.இராசா, எம்.பி., தலைமையில், திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளரும் - பொறுப்பு அமைச்சருமான மு.பெ.சாமிநாதன் முன்னிலையில், துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும்.

அதுபோது மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : மாணவர் அணியின் செயல்பாடுகள்
மேம்படுத்துதல் - குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21.03.2025

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி.